# BENEVOLENT IAS ACADEMY

1626A, Sri Vinayaga Complex, Avinashi Road, Hope College,
Peelamedu (PO), Coimbatore – 641004.
Cell: +91-9787731607/9787701067.
Web: www.benevolentacademy.com E-Mail:benevolentacademy@gmail.com


# DAILY IMPORTANT CURRENT AFFAIRS

## TNPSC Group I, II/IIA & IV

DATE: 06.05.2025

### 1) பொருநை அருங்காட்சியகம் ஆகஸ்டில் திறப்பு



- ✓ பொருநை அருங்காட்சியகம் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, ரெட்டியார்பட்டி மலைப்பகுதியில் 13 ஏக்கர் பரப்பில் ரூபாய் 56.57 கோடி பண மதிப்பீட்டில் ஆகஸ்டில் திறக்கப்பட உள்ளது.
- ✓ இந்த அருங்காட்சியகத்தில் ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை போன்ற இடங்களில் கிடைத்த அகழ்வாராய்ச்சி பொருட்கள் காட்சிப்படுத்தப்படும்.
- ✓ **பணி தொடங்கப்பட்ட நாள் 18-05-2023**
- ✓ திறப்பு விழா - ஆகஸ்ட் 2025

### 2) கன்னிமாரா நூலக நுழைவு வாயிலில் கார்ல் மார்க்ஸ் சிலை




- கம்யூனிசத்தின் தந்தை என்று போற்றப்படும் **கார்ல் மார்க்ஸின் பிறந்த நாளான மே 5 - ஐ** நினைவு கூறும் பொருட்டு கன்னிமாரா நூலக நுழைவு வாயிலில் சிலை அமைக்கப்படும் என்று தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.
- கார்ல் மார்க்ஸ் பொதுவுடைமை கருத்துக்களை வழங்கியவர்.

### 3) தமிழ் வார விழா

- ✓ **பாரதிதாசன் பிறந்த நாளான ஏப்ரல் 29- ஐ** சிறப்பு செய்யும் பொருட்டு ஏப்ரல் 29 முதல் மே 5 வரையிலான ஒரு வாரத்தை தமிழ் வார விழா என்று தமிழக அரசு அறிவித்து சிறப்பு செய்துள்ளது.




- ✓ இந்த விழாவில் தமிழ் வளர்ச்சித் துறை, செய்தி துறை, பண்பாட்டு துறை என பல அரசு துறைகள் சார்பில் விழாக்கள் நடத்தப்பட்டது.
- ✓ மேலும் தமிழ் வளர்ச்சி துறை மூலம் மறைந்த எழுத்தாளர் கவிக்கோ அப்துல் ரகுமான் உள்ளிட்ட ஐந்து சிறந்த தமிழ் எழுத்தாளர் படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட்டன.
- ✓ தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் - மு பெ சாமிநாதன்

### 4) மரபணு திருத்தப்பட்ட இரண்டு நெல் ரகங்கள்

- நாட்டில் முதல்முறையாக மரபணு திருத்தம் செய்யப்பட்ட இரண்டு நெல் ரகங்கள்
    - டி ஆர் ஆர் தன் 100 (கமலா)
    - பூசா டி எஸ்டி ரைஸ் 1

  அறிமுகம் செய்யப்பட்டன.

- இவை 30% கூடுதல் விளைச்சலையும் பருவநிலை மாற்றப் பாதிப்புகளை தாக்குப்பிடிக்கும் திறனையும் கொண்டுள்ளன.

### 5) சர்வதேச தொல்பொருள் குழு - ஈட்டி முனை கண்டுபிடிப்பு

- ✓ சர்வதேச தொல்பொருள் குழுவால் **ஐரோப்பாவில் நியாண்டர்தால்களால் வடிவமைக்கப்பட்ட ஒரு ஈட்டி முனை** கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ✓ இது ரஷ்யாவின் வடக்கு காகசஸ் பகுதியில் உள்ள குகையில், வண்டல் அடுக்கில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### 6) பாக்லிஹார் நீர்மின் திட்டம் (பாகலிஹார் அணை)

- ஜம்மு & காஷ்மீர் மாநிலத்தின், ரம்பன் மாவட்டத்தில், செனாப் ஆற்றின் துணை நதியான மசுருதர் ஆற்றின் மீது பகலிகார் அணை அமைந்துள்ளது.
- பாகல்ஹாம் தாக்குதலுக்கு எதிர்வினையாக இந்தியா, பாகிஸ்தானுக்கு செல்லும் செனாப் நதியின் நீரை தடுத்து நிறுத்தியுள்ளது.

7) **ஆப்பரேஷன் ககர்**

- ✓ மார்ச் 2026க்குள் மாவோயிஸ்டுகளின் கிளர்ச்சியை அகற்றுவதற்காக ஆபரேஷன் ககர் எனும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- ✓ இது 2024 இல் இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்டது.

8) **போர் விமானங்கள் தரையிறங்கக்கூடிய முதல் விரைவு சாலை**

- இரவில் போர் விமானங்கள் தரையிறங்கக்கூடிய முதல் விரைவுச் சாலையாக உத்தரப்பிரதேச மாநிலம், "கங்கா விரைவு சாலை" அமைய உள்ளது.
- இது மீரட் மற்றும் பிரயாக்ராஜ் பகுதிகளை இணைக்கும் வகையில் 594 கிலோ மீட்டர் நீளமுள்ள பசுமை பாதையாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

9) "ஹரியானாவுக்கு தண்ணீர் கிடையாது" என்று பஞ்சாப் தீர்மானம் செய்துள்ளது.
பக்ரா - பியாஸ் மேலாண்மை வாரியம் 1966 (பெயர் மாற்றம் 1976)
பக்ராநங்கல் திட்டம் 1967

10) **"The Kashmir Shawl"** book written by Rosie Thomas

11) முதல் **"WAVES"** உச்சி மாநாடு நடைபெறும் இடம் - மும்பை

25.04.2025